## சாலை விபத்தில் உயிரிழந்த

# 2 கழகக் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சம்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**மதுரை, டிச.25-**

**மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாலை விபத்தில் மரணமடைந்த விழுப்புரம் மத்திய மாவட்டம் மு.இராமதாஸ் - நாமக்கல் கிழக்கு மாவட்டம் கு.சரவணகுமார் ஆகிய இரண்டு குடும்பங்களுக்கும் தி.மு.க. சார்பில் தலா ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.20 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார்.**


**இதுவரை 12 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.1 கோடியே 20 லட்சம் வழங்கப் பட்டுள்ளது.**


மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் - மு.க.ஸ்டாலின் அவர்கள், “கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்.” என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில், விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூரைச் சேர்ந்த திருமதி சரிதா, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த க.முத்தமிழ்ச்செல்வன் ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வே.சரவணன், திருவாரூர் மாவட்டத்தைச் எம்.விக்னேஷ், கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த குப்புசாமி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஏ. ராம்பிரசாத், நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரண்ராஜ், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.பிரகாசம், திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.மேகலிங்கம், சேலம் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.முருகன் ஆகிய 10 குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து;

25.10.2025 அன்று விழுப்புரம் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான மு.இராமதாஸ் அவர்கள், விழுப்புரம் மாம்பழப்பட்டு சாலை திருச்சி பைபாஸ் பாலத்தின்கீழ் சர்வீஸ் சாலையில் நின்றிருந்தபோது கார் மோதிய விபத்தில் சிக்கியும் 26.08.2025 அன்று நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான கு.சரவணகுமார் அவர்கள், வெண்ணந்தூர், மடம் பேருந்து நிறுத்தம் அருகில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது லாரி மோதிய விபத்தில் சிக்கியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த இவ்விரண்டு குடும்பங்களுக்கும் குடும்ப நிவாரண நிதியாக, தலா ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையினை, முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், விழுப்புரம் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த மு.இராமதாஸ் அவர்களின் மனைவி திருமதி சௌமியா அவர்களிடமும் மற்றும் நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரவணகுமார் அவர்களின் மனைவி திருமதி சங்கீதா அவர்களிடமும் நேற்று முன்தினம் (23.12.2025) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் வழங்கினார்.

அதுபோது கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மாவட்டச் செயலாளர்கள் கே.ஆர்.என்.ராஜேஷ் குமார் எம்.பி., இரா.லட்சுமணன் எம்.எல்.ஏ. ஆகியோர் உடனிருந்தனர்.




---

### கிருஷ்ணகிரி – காவேரிப்பட்டினம் மேற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த

## சமூக சேவகர் சங்கர் தருமன் கழகத்தில் இணைந்தார்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்



**சென்னை, டிச. 25-**

**முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், காவேரிப்பட்டினம் மேற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த சமூக சேவகர் சங்கர் தருமன் அவர்கள் தி.மு.க.வில் இணைந்தார்.**

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று முன்தினம் (23.12.2025) காலை, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், காவேரிப்பட்டினம் மேற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த சமூக சேவகர் சங்கர் தருமன் அவர்கள், தி.மு.க.வில் இணைந்தார்.

அதுபோது கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மண்டலப் பொறுப்பாளரும் – அமைச்சருமான அர.சக்கரபாணி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன், எம்.எல்.ஏ. ஆகியோர் உடனிருந்தனர்.



பல்லடத்தில் நடைபெறும் மகளிர் மண்டல மாநாட்டிற்க்கு ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக மகளிர் அணியினர் மாநாட்டிற்கு செல்வது குறித்து வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி கழக நிர்வாகிகள், மகளிர் அணிகளுடனும் ஆலோசனை நடத்தினார்.

---

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலை! நிவேதா எம், முருகன் எம்.எல்.ஏ. – எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

## அச்சு இயந்திரத்தை நிறுவிய சீகன் பால்கு - ரூ.7 கோடியில் சிலையுடன் அரங்கம்!

### திட்டப் பணியை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார்!

*மயிலாடுதுறை, டிச. 25-*

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி பேரூராட்சி எருக்கட்டாஞ்சேரி கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் தமிழ்நாட்டில் முதன்முறையாக அச்சு இயந்திரத்தை நிறுவி கிறிஸ்தவ மக்களின் புனிதநூலான விவிலியத்தை புதிய ஏற்பாடு எனும் பெயரில் தமிழில் அச்சிட்டு வெளியிட்ட சீகன் பால்கு அவர்களுக்கு ரூ.7 கோடி மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் அரங்கம் கட்டுவதற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் .மு.பெ.சாமிநாதன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன். முன்னிலையில் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

ஜெர்மனியைச் சேர்ந்த சீகன்பால்கு 10.07.1682 அன்று ஜெர்மனியில் சாக்சோனி மாநிலத்தில் புல்நிட்ஸ் என்ற ஊரில் பிறந்தார். சமயப்பணிக்காக 11.11.1705 அன்று ஜெர்மானிய நாட்டில் இருந்து புறப்பட்டு 222 நாட்கள் கப்பல் பயணத்திற்குப்பின் 9.7.1706 ல் தரங்கம்பாடி வந்தடைந்தார். சீகன்பால்கு தமிழ்மொழியின் மீது ஆர்வம் கொண்டு விரைவாக எழுதவும், படிக்கவும் கற்று கொண்டார். அதைத் தொடர்ந்து தமிழ் அச்சு எழுத்துக்களை வடிவமைத்து அச்சுக்கலையில் தமிழை கொண்டுவரப் பெரும் முயற்சி மேற்கொண்டார்.

அதன்படி, தரங்கம்பாடியில் 24.10.1712 அன்று தமிழ்மொழிக்காக அச்சு கூடத்தை அமைத்தார். அதன் மூலம் புதிய ஏற்பாடு, தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் அகராதி, செந்தமிழ் அகராதி உள்ளிட்ட பல்வேறு நூல்களை ஓலைச்சுவடியில் இருந்து காகிதத்தில் அச்சேற்றி வெளியிட்டார். அதனை தொடர்ந்து 1713 ஆம் ஆண்டு பைபிள் புதிய ஏற்பாட்டுக்கான அச்சு கோர்க்கும் பணி தொடங்கி, 1715ம் ஆண்டு ஜூலை 15ம் தேதி பணிகள் முடிவடைந்து, புதிய ஏற்பாடு நூலை தமிழில் அச்சிட்டு வெளியிட்டார். பெண்களுக்கான முதல் கல்வி நிலையம் கணவரை இழந்த பெண்களை ஆசிரியர்களாக கொண்டு பள்ளிக்கூடம், தையற்பயிற்சி, பள்ளி விடுதிகள் ஆகியவற்றை அமைத்து கல்வி, சமூக முன்னேற்றத்திற்காக பாடுபட்டார்.

தமிழ்நாடு அரசு சீகன் பால்கு அவர்களின் பெருமையை போற்றும் வகையில், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சட்டமன்றத்தில், சீகன் பால்கு அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்படும் என அறிவித்தார்கள். அதன்படி, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் ரூ.7 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தரங்கம்பாடி பேரூராட்சி, எருக்கட்டாஞ்சேரி கிராமத்தில், 9490 சதுர அடி பரப்பளவில் தரைதளத்தில், 350 நபர்கள் அமரும் வகையில், திருமண மண்டபம், உணவருந்தும் அறை, சமையலறை, வரவேற்பறை, கழிவறை உள்ளிட்ட வசதிகளுடன் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா தரங்கம்பாடி எருக்கட்டாஞ்சேரி நடைபெற்றது.

விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் எஸ்.ஸ்ரீகாந்த் தலைமை தாங்கினார்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். விழாவில் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள் செல்வம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க. அன்பழகன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம். எம். சித்திக், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட கழக துணை செயலாளர் மு.ஞானவேல், மாவட்ட வருவாய் அலுவலர் பூங்கொடி, பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் பிரான். பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் கவிதா, ஒன்றிய கழக செயலாளர் எம்.அப்துல் மாலிக், பி.எம். அன்பழகன், அமிர்த.விஜயகுமார், மயிலாடுதுறை நகர கழக செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர் கென்னடி, பேரூர் கழக செயலாளர் எஸ்.கே.முத்துராஜா எம்.சம்சுதீன், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுண சங்கரி, தரங்கம்பாடி பேரூராட்சி துணை தலைவர் பொன் ராஜேந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம். கே.மருது, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ராஜ்குமார், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பரிதி, தரங்கம்பாடி பேரூர் நிர்வாகிகள் அவைத் தலைவர் கந்தசாமி, துணைச் செயலாளர் அம்பிகா. மாவட்ட பிரதிநிதி ஏ.சடகோபன் , சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் சுரேஷ், வட்டாட்சியர் சதீஷ்குமார், டி.இ.எல்.சி. பேராயர் டாக்டர். கிறிஸ்டியான் சாம்ராஜ், டி.இ.எல்.சி. ஆலோசனை சங்க செயலர்.தங்கப்பழம், மறைமாவட்ட தலைவர் (டி.இ.எல்.சி.) ஜான் தினகரன், தரங்கம்பாடி சபைகுரு (டி.இ.எல்.சி.) சார்லஸ், முன்னாள் தரங்கம்பாடி சபை குரு (டி.இ.எல்.சி.) திரு.சாம்சன் மோசஸ், பொறையார் சபைகுரு (டி.இ.எல்.சி.) மான்சிங் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஓசூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கிராமப்பகுதி சாலைகள், மாநில எல்லை சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதை ஆய்வு செய்த சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களிடம் அனுமதி பெற்று ஓசூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விஸ்வநாதபுரம், தேவிசெட்டிபள்ளி, தும்மணபள்ளி, பேகேபள்ளி, பெத்தஎலசகிரி, பேகூர் முதல் மாநில எல்லை வரையிலான பகுதிகளில் 6.26 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புதிய தார்ச் சாலை, சிமெண்ட் சாலை அமைப்பதற்கான பணிகளை கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ் துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் கஜேந்திர மூர்த்தி உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.